செ.வெ.எண்.52 நாள்: 23.07.2020

தூத்துக்குடி மாநகராட்சிக்கு மேல சண்முகபுரத்தில் "கொரோனா இல்லா தூத்துக்குடி" அமைப்பின் மூலம் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கும் பணிகளை துவக்கி வைத்து, பூபாலராயபுரம், கிருஷ்ணராஜபுரம் ஆகிய நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகளையும், காய்ச்சல் சிறப்பு முகாமில் சளி மாதிரிகள் சேகரிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாநகராட்சிக்கு மேல சண்முகபுரத்தில் "கொரோனா இல்லா தூத்துக்குடி" அமைப்பின் மூலம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ சண்முகபுரம் பகுதி பொதுமக்களுக்கும் கபசுர குடிநீர் வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். மேலும் பொதுமக்களுக்கு முககவசங்கள் மற்றும் கிளவுஸ் ஆகியவற்றை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து பூபாலராயபுரம், கிருஷ்ணராஜபுரம் ஆகிய நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகளையும், காய்ச்சல் சிறப்பு முகாமில் சளி மாதிரிகள் சேகரிக்கும் பணிகளை இன்று (23.07.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் நோய் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள அனைவருக்கும் தெர்மல் ஸ்கிரினிங் மற்றும் பல்சஸ் பரிசோதனை செய்ய வேண்டும் எனவும், கொரோனா தடுப்பு பணிகளை நோய் கட்டுபாட்டு பகுதியில் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் நோய் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள அனைவருக்கும் கபசுர குடிநீர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மாத்திரைகள் வழங்க தெரிவித்தார்.

பின்னர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் இதுவரை 50,726 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் 4,356 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு பகுதியில் சளி, காய்ச்சல் உள்ள நபர்கள் அதிக அளவு கண்டறியப்பட்டால் அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. பரிசோதனை செய்யப்பட்டதில் 2 அல்லது 3 நபர்களுக்கு மேல் கொரோனா தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டால் உடனடியாக அந்த பகுதி நோய் கட்டுப்பாட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டு அந்த பகுதியில் உள்ள

அனைவருக்கும் தெர்மல் ஸ்கிரினிங், பல்சஸ் பரிசோதனை மற்றும் வீடு வீடாக கபசுர குடிநீர் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாநகராட்சியில் 15 நோய் கட்டுபாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டு அந்த பகுதிகளில் கொரோனா தடுப்பு பணிகள் மாநகராட்சி மூலம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலசண்முகபுரம் மற்றும் வன்னியாச்சி தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 2,000 வீடுகள் உள்ளது. இந்த பகுதிகளில் அதிகமான நபர்களுக்கு சளி, காய்ச்சல் உள்ளதாக தகவல் கிடைக்கப்பட்டது. அதனடிப்படையில் நேற்றைய தினம் 100 மாதிரிகள் பரிசோதனைகள் செய்ததில் 23 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும் இப்பகுதியில் எந்த ஒரு தளர்வும் இல்லாமல் நோய் தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளபட உள்ளதால் படிப்படியாக தொற்றின் எண்ணிக்கை குறைய வாய்ப்பு உள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி நோய் கட்டுபாட்டு பகுதியில் காவல் துறை மூலம் தேவையான பாதுகாப்புகளும், தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் காய்ச்சல் சிறப்பு முகாம் அந்த பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு கபசுர குடிநீர், விட்டமின் மற்றும் சிங் மருந்துகள் வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இன்று தூத்துக்குடி மாநகராட்சிக்கு மேல சண்முகபுரத்தில் "கொரோனா இல்லா தூத்துக்குடி" அமைப்பின் மூலம் பொதுமக்களுக்கும் கபசுர குடிநீர் வழங்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும் கோவில்பட்டி மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமம் என 8 தெருக்களும், காயல்பட்டணம் நகராட்சி 7 தெருக்களும் நோய் கட்டுபாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டு கொரோனா தடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அந்த பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு கபசுர குடிநீர், விட்டமின் மற்றும் சிங் மருந்துகள் வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட நபர்களை உடனடியாக தனிமைபடுத்தி சிகிச்சை அளித்து வருவதாலும், அவருடன் தொடர்பில் உள்ள நபர்களையும் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டு வருவதாலும், இந்த நோய் பரவலை கட்டுபடுத்தப்படுகிறது.

தற்போது 70 சதவிதம் நபர்கள் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் தொடர்புடையவர்களாக உள்ளார்கள். 15 முதல் 20 சதவிதம் நபர்கள் சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் நபர்கள். கடந்த 2, 3 தினங்களாக சளி, காய்ச்சல், இரும்பல் போன்ற அறிகுறிகள் உள்ள நபர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. நமது மாவட்டத்தில் தினந்தோறும் சுமார் 1,500 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் 1,540 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பரிசோதனைகளை அதிகமாக மேற்கொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி தூத்துக்குடி அரசு மருத்துவமனை மற்றும் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியில் ஆர்டிபிசியல் ஆய்வகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் இருந்து 2,000 மாதிரிகள் பரிசோதனைகள் செய்ய கூடுதல் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் கோவிட் கேர் சென்டர் 4 இடங்களில் 800 படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. கூடுதலாக தூத்துக்குடி மாநகராட்சி, கோவில்பட்டி மற்றும் காயல்பட்டணம் பகுதிகளில் தலா ஒரு கோவிட் கேர் சென்டர் ஏற்படுத்திடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. படுக்கை வசதிகளும் 1,000ஆக உயர்த்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 600 படுக்கைகள் ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது. மேலும் கூடுதலாக 100 படுக்கைகள் ஆக்சிஜன் பைப்லைன் வசதியுடன் அமைத்திட பொதுப்பணித்துறை அலுவலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் 3 அல்லது 4 நாட்களுக்குள் இதற்கான பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி கொரோனா தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தினசரி கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் தமிழக அரசு தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாநகராட்சி மேல சண்முகபுரம் பகுதியில் 35 முதல் 40 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் நோயாளிகள் வெளியே செல்லாமல் கண்காணிக்க கூடுதலாக காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் உள்ளே செல்லும்போதும், மருத்துவமனையில் இருந்து வெளியே வரும்போதும் 100 சதவிதம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் தொடர்பாளர்களுக்கும் உரிய பரிசோதனைகள் மேற்கொண்டு வருவதால் நமது மாவட்டத்தில் சமூக பரவல் ஏற்படவில்லை. பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியே வரும்போது முககவசங்கள் கட்டாயமாக அணிய வேண்டும். சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். தொற்று நோய் பரவாமல் இருக்க பொதுமக்கள் கையில்தான் உள்ளது. மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளப்படும் கொரோனா தொற்று தடுப்பு பணிகளுக்கு பொதுமக்கள் 100 சதவிதம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.அருண்குமார், சுகாதார அலுவலர்கள் திரு.ஸ்டாலின், திரு.ராஜசேகர், திரு.ஹரிகணேஷ், மரு.இம்மானுவேல்டயாஸ், கொரோனா இல்லாத தூத்துக்குடி அமைப்பு நிர்வாகிகள் திரு.பொன்முருகன், திரு.ஜெகஜீவன், திரு.சசிகுமார் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.